# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண். 338** **நாள். 27–6–2021**

## தமிழ்நாட்டில் ஊரடங்கு கட்டுப்பாடுகளில் கூடுதல் தளர்வுகள்
## மாண்புமிகு முதலமைச்சர் திரு முக. ஸ்டாலின் அறிவிப்பு

தமிழ்நாடு அரசின் தளர்வுகளுடன் கூடிய ஊரடங்கு உத்தரவு நாளை ( 28–6–2021) முதல் நடைமுறைக்கு வரும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. இதுதொடர்பாக பொதுமக்கள், வணிக அமைப்புகள் ஆகியோரிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கைகள் , கருத்துக்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டு பின்வரும் கூடுதல் தளர்வுகள் அறிவிக்கப்படுகின்றன.

வகை 2 மாவட்டங்களில், துணிக்கடைகள், நகை கடைகள் காலை 9 மணி முதல் மாலை 7 மணிவரை 50 சதவிகித வாடிக்கையாளர்களுடன் குளிர்சாதன வசதி இன்றி செயல்பட அனுமதிக்கப்படும்.

பொதுமக்கள் மற்றும் வணிக நிறுவனங்கள் மேற்படி புதிய தளர்வுகளை அரசு வெளியிட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி பொறுப்புடன் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன் என்று மாண்புமிகு முதலமைச்சர் திரு மு . க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

***

**வெளியீடு: இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**